**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா,பி.ஏ.,பி.எல்.,(Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆடி மாதம் 26 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.427/2025**

**CNR.No.TNKR03-000924-2025**

வெங்கடேசன் ...வாதி

**//எதிர்//**

சுதா ...பிரதிவாதி

இந்த வழக்கு இறுதியாக கடந்த 29.07.2026 என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.அன்பழகன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் M. தனபால் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதி தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா கடன் தொகையான ரூ.4,26,000/-ஐ பிரதிவாதி பின் வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்றும், தாவா செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2) அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்**

பிரதிவாதி வாதியிடம் கடந்த 03.12.2024 ம் தேதியன்று அவரது அவசர நிமித்தம் குடும்ப மற்றும் வியாபாரசெலவிற்காக கடனாக ரூ.4,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி

சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மேற்படி அசல் கடன் தொகையை தீர்க்கும் பொருட்டு, அன்றையதினமே பிரதிவாதி, சிட்டி யூனியன் வங்கி, திருப்பூர், தாராபுரம் ரோடு கிளையின் 000002 என்ற காசோலையை 03.01.2025 பின் தேதியிட்டு ரூ.4,00,000/-த்திற்கு கொடுத்தார். வாதி வங்கி கணக்கில் காசோலையை வசூலுக்கு செலுத்தியபோது, மேற்படி காசோலையானது பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திரும்பிவிட்டதாகவும், கடந்த 04.01.2025 ம் தேதியன்று வாதிக்கு தெரியவந்ததாகவும், எனவே வாதி பிரதிவாதிக்கு கடந்த 22.01.2025 ம் தேதி வழக்கறிஞர் மூலம் காசோலை தொகை திருப்பப்பட்டது குறித்தும், காசோலை தொகை கேட்டு அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிட்டதாகவும், எனவே, வாதி குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கரூரில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து STC.No.449/2025 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எனவே, பிரதிவாதி வாதிக்கு வட்டி, அசல் சேர்த்து ரூ.4,26,000/- மற்றும் பின்வட்டி, செலவுத் தொகை தர உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி வழக்குரை தாக்கல் செய்தவுடன் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் M. தனபால் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதி தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டது. கடந்த 29.07.2026 அன்று வாதி முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. இத்தோடு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

4) தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**5)பிரச்சனைக்கு தீர்வு–**

கடந்த 03.12.2024ம் தேதியன்று அவரது அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவிற்காக கடனாக ரூ.4,00,000/– பெற்றுக்கொண்டு பிரதிவாதி பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் வாதிக்கு திருப்பி செலுத்த உத்திரவிடக்கோரி வாதியால் இப்பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 ஆக கடந்த 03.01.2025ம் தேதியிட்ட 000002 என்ற எண் கொண்ட காசோலை, வா.சா.ஆ.2 ஆக காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை, வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு, வா.சா.ஆ.4 திருப்பட்ட அறிவிப்பு, வா.சா.ஆ.5 திருப்பப்பட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6 STC.No.449/2025 வழக்கின் புகார் மனு போன்ற ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

6) வாதி தரப்பு சாட்சியத்தையும், வாதியின் ஆவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்போது, பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.4,00,000/–ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு வாதியின் பெயருக்கு ஒரு 03.01.2025யில் ரூ.4,00,000/– மதிப்பிலான காசோலையை கொடுத்தார் என்றும், அதை அதே தேதியில் வாதி வங்கியான கரூர் வைஸ்யா வங்கி, கரூர் மெயின் கிளையில் உள்ள வங்கி கணக்கில் வசூலுக்கு செலுத்திய போது வங்கி கணக்கில் போதி பணம் இல்லை என்று திரும்பிவிட்டது என்பதும், வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118ன் கீழான சட்டப்படியான அனுமானங்கள் வாதிக்கு சாதகமாக எழுகிறது. மேற்படி, சட்டப்படியான அனுமானத்தை மறுத்தலிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித சான்றும் இல்லை. மேலும், பிரதிவாதி வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளதை கருத்தில் கொண்டும் வாதி தனது வழக்கை தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலமாக நிரூபித்துள்ளதை கருத்தில் கொண்டும் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய

தொகையை செலுத்தாததால் நிலுவை கடன் தொகை ரூ.4,26,000/-ஐ செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

7) இறுதியாக, பிரதிவாதி வாதிக்கு ரூ.4,26,000/-ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.4,00,000/-க்கு வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்று தாவா செலவு தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | வெங்கடேசன் (வாதி) |

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 03.01.2025 - பிரதிவாதி, புகார்தாரருக்கு கொடுத்த ரூ. 4,00,000/-க்கான சிட்டி யூனியன் வங்கி, திருப்பூர் ரோடு, தாராபுரம் ரோடு கிளையின் 000002 என்ற எண் கொண்ட காசோலை |
| வா.சா.ஆ.2 | 04.01.2025 - காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை அசல் |
| வா.சா.ஆ.3 | 22.01.2025 - பிரதிவாதிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | திருப்பபட்ட அறிவிப்புடன் கூடிய அஞ்சல் உறை அசல் |
| வா.சா.ஆ.5 | திருப்பபட்ட அறிவிப்புடன் கூடிய அஞ்சல் உறை அசல் \ |

| | |
|---|---|
| வா.சா.ஆ.6 | மாண்புமிகு விரைவு நீதிமன்றம் (குற்றவியல் நடுவர் நீதிமன்றம்), கரூரில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட STC.No. 449/2025 வழக்கின் புகார் மனு நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**